செ.வெ.எண். நாள். 19.12.2011

**நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் 29 நபர்களுக்கு ரூ.3.87 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் பல்வேறு ஓய்வூதிய திட்டங்களின்கீழ் 41 நபர்களுக்கு ஓய்வூதியத் தொகை பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார்.**

---

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (19.12.2011) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் குடும்ப அட்டை, வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, கல்விக்கடன், பட்டா மாறுதல், விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் வரப்பெற்றது. மனுக்களை பரிசீலித்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அளித்து மனுக்களின் மீது 15 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மனுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்குமாறும் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விபத்து நிவாரண நிதி உதவியாக 13 நபர்களுக்கு ரூ.2.05 லட்சத்திற்கான காசோலைகள், இயற்கை மரணம் நிதியுதவியாக 9 நபர்களுக்கு தலா ரூ.12,500 வீதம் ரூ.1,12,500-க்கான காசோலைகள் 7 நபர்களுக்கு நலிந்தோர் நல நிதியுதவியாக தலா ரூ.10000 வீதம் ரூ.70,000-க்கான காசோலைகள் என மொத்தம் 29 நபர்களுக்கு ரூ.3,87,500-க்கான காசோலைகள் மற்றும் பல்வேறு ஓய்வூதிய திட்டங்களின் கீழ் 41 நபர்களுக்கு ஓய்வூதியத் தொகை பெறுவதற்கான ஆணைகளையும் ஆக மொத்தம் 70 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஆர். சீத்தாலட்சுமி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு ஆர். சண்முகராஜா மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.

செ.வெ.எண். நாள். 19.12.2011

**நாமக்கல் மாவட்ட ஆட்சியரகத்தில் வாக்காளர் பட்டியல் பார்வையாளர் திருமதி எம்.பி. நிர்மலா,இ.ஆ.ப. அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் ஆய்வு செய்தார்.**

---

நாமக்கல் மாவட்டத்திலுள்ள நாமக்கல், ராசிபுரம், பரமத்தி வேலூர், சேந்தமங்கலம், திருச்செங்கோடு. குமாரபாளையம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் 1.1.2012ஐ தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. சிறப்பு சுருக்கமுறை திருத்தப் பணிகளை வாக்காளர் பட்டியல் பார்வையாளர் திருமதி எம்.பி. நிர்மலா,இ.ஆ.ப. அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது அவர் தெரிவித்ததாவது.

ராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூனவேலம்பட்டி ஊராட்சியில் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தின்படி, வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டவர்களை நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஊராட்சியைச் சேர்ந்த 82 வயது மாரியம்மாள் புதிய வாக்காளராக சேர்க்கப்பட்டுள்ளார். பொதுமக்களிடம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு நிறைய விழிப்புணர்வு உள்ளது. தாமாகவே முன்வந்து வாக்காளராக பதிவு செய்து கொள்கிறார்கள். நாமக்கல் மாவட்டத்தில் வாக்காளராக பதிவு செய்வதற்கு மொத்தம் 77374 நபர்கள் படிவம் 6 மூலம் விண்ணப்பித்துள்ளார்கள். இதில் 18, 19 வயதுடைய 22105 நபர்கள் புதிதாக வாக்காளர்களாக சேர்வதற்கு விண்ணப்பம் அளித்துள்ளனர். மேலும் 25 திருநங்கைகள் படிவம் 6 ஐ சமர்ப்பித்துள்ளார்கள். ஏற்கனவே இருந்த வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்த 7844 நபர்கள் இறந்த காரணத்தினால் அவர்கள் பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6 ஐ சமர்ப்பித்துள்ளவர்களிடம் உரிய விசாரணை மேற்கொண்டு வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஆர்.சீத்தாலட்சுமி, நாமக்கல் சார் ஆட்சியர் திரு டி.ஜி. வினைய், இ.ஆ.ப. திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் திருமதி எஸ். கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு குழந்தைவேலு, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு வை. சுவாமிநாதன், அனைத்து வட்டாட்சியர்கள், அனைத்து நகராட்சி ஆணையர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்